

## ஜூலை 2, 2020 முதல், TTC பயணிகள் முகமூடிகள் அல்லது முக மறைப்புகளைக் கட்டாயமாக அணியவேண்டும்.

முக மறைப்பொன்றை அணிவது கிருமிகளின் பரவலைக் குறைக்க உதவுகிறது. மற்றவர்களைப் பாதுகாப்பதற்கு இது ஓர் இலகுவான வழியாகும்.

விதிவிலக்குகள், 2 வயதிற்குட்பட்ட பிள்ளைகள் மற்றும் பயன்படுத்துவதைத் தடுக்கும் மருத்துவ அல்லது ஏனைய நிலைமைகளைக் கொண்டவர்களை உள்ளடக்குகிறது.
TTC By-law No. 1, s. 3.13(a)

தைக்கத் தேவையற்ற முகமூடியை எவ்வாறு தயாரிப்பது என்பது பற்றிய மேலதிக தகவல்களுக்கு **ttc.ca/masks** க்குச் செல்லுங்கள்

# ஒரு தடவை மட்டும் பயன்படுத்தும் முக மறைப்புகளைப் பயன்படுத்துவதற்கான வழிமுறைகள்

## ஒரு தடவை மட்டும் பயன்படுத்தும் முக மறைப்பைப் பாதுகாப்பாக அணியும் முறை.

- அதைப் போடுவதற்கு முன்பாகவும் கழற்றுவதற்கு முன்பாகவும் உங்கள் கைகளைக் கழுவுங்கள் அல்லது அல்ககோலை (alcohol) மூலமாகக் கொண்ட கை சுத்திகரிப்பான்களைப் பயன்படுத்துங்கள்.
- முகமறைப்பின் நெகிழும்தன்மையுள்ள வளையங்களை (elastic loops) உங்கள் காதுகளைச் சுற்றிப் போடுங்கள்.
- அது உங்கள் வாய் மற்றும் மூக்கை மறைக்கக்கூடியதாக பொருந்தியிருப்பதை உறுதிப்படுத்துங்கள்.

- அதைப் பயன்படுத்தும்போது, உங்கள் முகத்தை மற்றும் முக மறைப்பைத் தொடுவதைத் தவிருங்கள்.
- உங்கள் காதிலிருந்து அல்லது உங்கள் நாடியிலிருந்து உங்கள் முக மறைப்புத் தொங்கிக்கொண்டிருக்க விடவேண்டாம்.

## ஒரு தடவை மட்டும் பயன்படுத்தும் முக மறைப்பைப் பாதுகாப்பாகக் கழற்றும் முறை.

1. **வெளிப்புறமாக இருக்கும் பக்கத்தைத் தொடாமல்** முக மறைப்பைக் கழற்றுங்கள்.
2. உங்கள் காதுகளைச் சுற்றியிருக்கும் முகமறைப்பின் நெகிழும்தன்மையுள்ள வளையங்களை (elastic loops) அகற்றுங்கள்.
3. வளையங்களில் அல்லது நாடாக்களில் மட்டும் பிடித்தபடி முகமறைப்பைக் குப்பையில் போடுங்கள்.
4. உங்கள் கைகளைக் கழுவுங்கள் அல்லது அல்ககோலை (alcohol) மூலமாகக் கொண்ட கை சுத்திகரிப்பானைப் பயன்படுத்துங்கள்.